## வாக்காளரின் பொறுப்பும் நிலைப்பாடும்

தமது உள்ளூராட்சி மன்றங்களுக்கு தாம் விரும்பும் பிரதிநிதியைத் தெரிவுசெய்வதற்காக தமது வாக்குரிமையைப் பிரயோகிக்கும் உரிமை வாக்காளர்களுக்கு உண்டு.

உகந்ததொரு பிரதிநிதியைத் தெரிவுசெய்யும் பொறுப்பும் வாக்காளர்களுக்கு உண்டு. அவ்வாறான ஒரு வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கு நாம் முன்மொழியும் சில அளவுகோல்கள் கீழ் தரப்பட்டுள்ளன:-

- தேர்தல் சட்டதிட்டங்களை மீறாத, தேர்தல் பிரச்சார செயன்முறையில் அல்லது வேறு சந்தர்ப்பங்களில் ஒழுங்கைப் பேணும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள். தமது தேர்தல் இயக்கத்தில் வன்செயல், பலவந்தம், பயமுறுத்தல் என்பவற்றிலிருந்து தூர விலகியிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள். தமக்கு எதிராக வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்படும் நிலையில்கூட எதிர் வன்செயல்களில் ஈடுபடாத வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள்.

- ஊழலில் ஈடுபடாத, நன்நடத்தை உடைய வேட்பாளர்களைத் தெரிவு செய்யுங்கள்.

- உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அவற்றுக்கு உரிய அதிகாரங்களுக்கும் வளங்களுக்கும் பொருந்தக்கூடிய, தெளிவான வேலைத்திட்டங்களை முன்வைக்கும் வேட்பாளர்கள் மீது கவனம் செலுத்துங்கள்.

- தமது பண பலம், அதிகார பலம் அல்லது அதிகார வர்க்கத்துடன் தமக்குள்ள தொடர்பைக் காட்டி, அதன் காரணமாக தமக்கு வாக்களிக்குமாறு கோரும் வேட்பாளர்களை நிராகரித்து விடுங்கள்.

- உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்புடையனவாகாத யோசனைகள், கோசங்கள் வழியே உங்களை வழி தவறச்செய்ய எடுக்கப்படும் முயற்சிகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

- மதம், இனம், சாதி, பால்நிலை முதலான விடயங்களை அடிப்படையாகக்கொண்டு பிளவுபடுத்த முயற்சிப்பவர்களை நிராகரித்து விடுங்கள்.

- உங்கள் முக்கிய பொறுப்பு, வாக்களிப்பதே. அவ்வேளையில், உகந்ததொரு வேட்பாளரைத் தெரிவுசெய்ய அல்லது உகந்தவர் அல்லாதவரை நிராகரிக்க உங்களுக்கு பூரண உரிமை உள்ளது.

- பண பலம், அதிகார பலம் என்பவற்றைத் திரட்டி வைக்காமல் உங்கள் சமூகத்திற்கு மிகச் சிறந்ததொரு சேவையை ஆற்றக்கூடிய ஆற்றல் உடையவர்களைத் தெரிவு செய்யுங்கள்.

- அதேபோல், தேர்தலின் பின்னரும் பொறுப்புடன்கூடிய ஊக்குமுள்ள ஒரு வாக்காளராக உங்கள் உள்ளூராட்சி மன்றத்தின் நல்லாட்சி குறித்து விழிப்பாக இருக்க வேண்டியுள்ளது. நியமிக்கப்படும் அங்கத்தவர்களிடமிருந்து ஒளிவுமறைவின்றியும் பொறுப்புணர்வுடனும்கூடிய ஆட்சியொன்றை கோரும் உரிமை உங்களுக்கு உண்டு.